KANCHIPURAM DISTRICT

K

# இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2018

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.30 மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 45

### பகுதி - அ

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: **10×1=10**

1) இருப்பாய்வை பாதிக்காத பிழைகள்
   அ) விதிப் பிழைகள் ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்
   இ) குறைவாகக் கூடுதல் பிழைகள் ஈ) பகுதிவிடு பிழைகள்

2) கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும் போது, கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?
   அ) கொள்முதல் கணக்கு ஆ) அனாமத்துக் கணக்கு
   இ) கடனீந்தோர் கணக்கு ஈ) மேற்கண்டது ஏதும் இல்லை

3) தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
   அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ, ஆ மற்றும் இ

4) பின்வரும் எந்த சொத்துகளும் வெறுமையாதல் முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது?
   அ) பொறி மற்றும் பொறி இயந்திரம் ஆ) சுரங்கம் மற்றும் கற்சுரங்கங்கள்
   இ) கட்டடங்கள் ஈ) வணிகக்குறி

5) பேரளவிலான விளம்பரச்செலவு
   அ) முதலினச் செலவு ஆ) வருவாயினச் செலவு
   இ) நீள்பயன் வருவாயினச் செலவு ஈ) வருவாயின வரவு

6) வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
   அ) கடந்த காலத்திற்கு ஆ) நடப்பு காலத்திற்கு
   இ) எதிர் காலத்திற்கு ஈ) எந்த காலத்திற்கும்

7) வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்?
   அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாபநட்டக் கணக்கில்
   இ) பொறுப்பு பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

8) நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
   அ) ஓர் நடப்புச்சொத்து ஆ) ஓர் நீர்மைச்சொத்து
   இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

9) தொடக்கச் சரக்கிருப்பு ரூ. 10,000; விற்பனை ரூ. 40,000; கொள்முதல் ரூ. 25,000; இறுதிச் சரக்கிருப்பு ரூ. 15,000 - மொத்த இலாபம் காண்க.
   அ) ரூ. 15,000 ஆ) ரூ. 55,000 இ) ரூ. 25,000 ஈ) ரூ. 20,000

10) சொத்தின் அடக்கவிலை காண்க.
   சொத்தின் வாங்கிய விலை ரூ. 1,00,000; நிறுவுலகச் செலவு ரூ. 20,000; இறுதி மதிப்பு ரூ. 50,000
   அ) ரூ. 80,000 ஆ) ரூ. 1,70,000 இ) ரூ. 1,20,000 ஈ) ரூ. 30,000

Scanned by CamScanner

பகுதி - ஆ

**II.** ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்: **4×2=8**

11) பிழைகளின் வகைகள் யாவை?

12) கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தேய்மான விகிதம் காண்க.
இயந்திரம் வாங்கிய விலை ரூ. 38,000; நிறுவாகச்செலவு ரூ. 12,000
இறுதி மதிப்பு ரூ. 10,000; பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள்.

13) தேய்மானம் என்றால் என்ன?

14) முதலினச் செலவு என்றால் என்ன?

15) இறுதிக் கணக்குகள் என்றால் என்ன?

16) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபநட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | ரூ. 12,500 | வட்டி பெற்றது | ரூ. 500 |
| தள்ளுபடி கொடுத்தது | ரூ. 100 | வெளிதூக்குக்கூலி | ரூ. 200 |
| வாடகை | ரூ. 200 | உள்தூக்குக்கூலி | ரூ. 100 |

17) பின்வரும் செலவுகளை முதலினம் அல்லது வருவாயின எனக் கூறவும்.

| | |
|---|---|
| அறைகலன் பழுதுபார்த்தது | ரூ. 50,000 |
| பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது | ரூ. 10,000 |

பகுதி - இ

**III.** ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்: **4×3=12**

18) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்க்கண்ட பிழைகள் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.
அ) கொள்முதல் ஏட்டில் ரூ. 3,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
ஆ) விற்பனை ஏட்டில் ரூ. 1,000 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
இ) விற்பனை திருப்ப ஏட்டில் ரூ. 700 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

19) நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

| | | | |
|---|---|---|---|
| இயந்திரம் வாங்கிய விலை | ரூ. 80,000 | நிறுவுவதற்கான செலவு | ரூ. 5,000 |
| இறுதி மதிப்பு | ரூ. 20,000 | முதலாக்கச் செலவு | ரூ. 15,000 |
| பயனளிப்பு காலம் | 5 ஆண்டுகள் | | |

20) கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.
அ) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்ப்புச் செலவு ரூ. 3,000.
ஆ) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ரூ. 2,000.
இ) கழிவு பெற்றது ரூ. 3,000.

21) இருப்புநிலைக்குறிப்பு ஒரு கணக்கல்ல - விளக்குக.

22) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31 டிசம்பர் 2017 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

Scanned by CamScanner

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | உள்திருப்பம் | 7,000 |
| கொள்முதல் | 27,000 | நிலக்கரி மற்றும் எரிவாயு | 3,300 |
| விற்பனை | 40,000 | உள்தூக்குக் கூலி | 2,600 |
| கூலி | 2,500 | இறுதிச் சரக்கிருப்பு | 5,200 |
| வெளித்திருப்பம் | 5,200 | | |

23) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? (ஏதேனும் மூன்று)

24) வியாபாரக் கணக்கின் பற்றுப்பக்கம் இடம்பெறும் இனங்கள் யாவை?

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3×5=15**

25) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்துக.

அ) சுரேஷ்க்கு ரூ. 500 செலுத்தியது தவறுதலாக சுபாஷ் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

ஆ) அறைகலன் ரூ. 750க்கு விற்றது, விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இ) கலாவிடமிருந்து சரக்கு ரூ. 2,100க்கு வாங்கியது, தவறுதலாக விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஈ) இயந்திரம் நிறுவுவதற்குச் செலுத்திய கூலி ரூ. 1,000 கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

உ) சொந்த உபயோகத்திற்காக உரிமையாளரால் ரொக்கம் ரூ. 500 எடுக்கப்பட்டது. சம்பளக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

(அல்லது)

நேர்க்கோட்டு முறைக்கும், குறைந்தசெல் மதிப்பு முறைக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

26) முதலின, வருவாயின மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகள் - ஒப்பிடுக.

(அல்லது)

ஒரு தயாரிப்பு நிறுமம் ஏப்ரல் 1, 2010 அன்று பொறிவகை மற்றும் இயந்திரம் ரூ. 4,50,000க்கு வாங்கி, நிறுவுதல் செலவாக ரூ. 50,000 செலவழித்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு அச்சொத்தானது ரூ. 3,85,000க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுதோறும் 15% நேர்கோட்டு மதிப்பு முறையில் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31ல் முடிக்கப்படுகின்றன. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு தயாரிக்கவும்.

27) பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயின அல்லது நீள்பயன் வருவாயின செலவினங்களா எனக் கூறவும்.

1. சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது ரூ. 10,000.
2. முதலீடு விற்பனைச் செய்தது ரூ. 15,000.

Scanned by CamScanner

3. ஆலை வாடகைச் செலுத்தியது ரூ. 1,000.
4. புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கொண்ட பேரளவிலான விளம்பரச் செலவு ரூ. 2,50,000.
5. தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ரூ. 20,000.

(அல்லது)

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து ராமன் என்பவரின் ஏடுகளில் 2016 டிசம்பர் ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பையும் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 5,000 | விற்பனை | 14,000 |
| கூலி | 5,400 | கொள்முதல் | 6,600 |
| இறுதிச் சரக்கிருப்பு | 8,000 | சம்பளம் | 5,200 |
| பெற்ற தள்ளுபடி | 5,000 | முதல் | 1,04,000 |
| இயந்திரம் | 1,04,000 | வங்கி ரொக்கம் | 12,800 |
| கடனீந்தோர் | 16,000 | | |

---------

Scanned by CamScanner